## காசநோய் என்றால் என்ன?

காசநோய் (டி.பி.) என்பது பாக்டீரியா தொற்று நோய். இது அதிகமாக நுரையீரலை பாதிக்கிறது. ஆனால் இது மூளை, நிணநீர் சுரப்பி, சிறுநீரகம் மற்றும் எலும்புகள் போன்ற உடலின் மற்ற பகுதிகளையும் பாதிக்கிறது.

## இது எப்படி வருகிறது?

நுரையீரல் காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருமும் போது கிருமிகள் காற்றில் பரவுகின்றன. மற்றவர்கள் இதனை சுவாசிக்கக் கூடும். காசநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வாழும் வீட்டில் வசிப்பவர்களுக்கு காசநோய் வரும் வாய்ப்புகள் அதிகம்.

## என்னால் நோய் பரவுமா?

காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவர் மூலமாகவும் காசநோய் பரவாது. நுரையீரல் அல்லது தொண்டையில் காசநோய் இருந்து, காசநோய் கிருமிகள் இருமல் மூலமாக வெளிவந்தால் காசநோய் பரவும் (இதுதான் ஸ்மியர் பாசிட்டிவ்). நுரையீரலையும் தொண்டையையும் தவிர்த்து உங்களுக்கு வேறு எங்கும் காசநோய் இருந்தால் உங்கள் மூலமாக நோய் பரவாது. உங்கள் மருத்துவர்/செவிலியர் உங்களுக்குக் கூடுதல் தகவல்களைத் தரலாம்.

## மல்ட்டி-ட்ரக் ரெசிஸ்டண்ட் டியூபர்குலாசிஸ் (எம்.டி.ஆர்.டி.பி.) என்றால் என்ன?

காசநோய் சிகிச்சைக்காக உபயோகிக்கப்படும் சக்தி வாய்ந்த இரண்டு மருந்துகளுக்கும் காச நோய் கிருமிகள் அழியவில்லை என்றால் எம்.டி.ஆர். டி.பி. உருவாகிவிடும். அப்படியென்றால், இந்த மருந்துகள் சரியாக வேலை செய்யாது. அதனால் காசநோய் பாக்டீரியாக்கள் அழியாது.

## ஒருவருக்கு எம்.டி.ஆர். டி.பி. இருப்பதை எப்படித் தெரிந்து கொள்வது?

பல்வேறு மருந்துகளால் கிருமிகள் கொல்லப்படுகிறதா என்பதை ஆராய காசநோய் கிருமிகள் இருக்கும் மாதிரிகள் ஆய்வுக்கூடத்தில் பரிசோதிக்கப்படும். அவை கொல்லப்படவில்லை எனில் நோயாளிக்கு சாதாரண மருந்துகள் போதாது என்று அவருக்கு எம்.டி.ஆர். டி.பி. பரிந்துரைக்கப்படும்.

## எம்.டி.ஆர். டி.பி. ஏன் வருகிறது?

1. ஏதேனும் காரணங்களுக்காகப் போதுமான சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் காசநோயை எதிர்க்க முடியாது:
   - பரிந்துரைக்கப்பட்ட மருந்தை ஒழுங்காக எடுத்துக் கொள்ளாமலோ, முழு சிகிச்சைப் பெறாமலோ இருத்தல்.
   - வாந்தி போன்ற காரணங்களால் நோயாளியால் மருந்தை முழுவதுமாக உட்கிரகிக்க முடியாமல் போதல்.
   - மருந்து சரியாகப் பரிந்துரைக்கப்படாமலோ கொடுக்கப்படாமலோ இருத்தல்.
   - மருந்து குறைந்த தரம்மிக்கதாக இருத்தல்.
2. வழக்கமான மருந்துக்கு குணமாகாத காசநோயைக் கொண்ட நபரிடமிருந்து உங்களுக்கு காசநோய் தொற்றியிருந்தால் ஆரம்பத்திலிருந்தே வழக்கமாக உபயோகப்படுத்தப்படும் மருந்து காசநோயைத் தடுக்காமல் போகலாம்.

சாதாரண காசநோயைப் போல் எம்.டி.ஆர். டி.பி. பரவாது. ஆனால் இதற்காக உபயோகப்படுத்தப்படும் மருந்து குறைவாகவே வேலை செய்யும். இதனை அதிக நாட்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். வழக்கமான மருந்துக்கு குணமாகக் கூடிய காசநோயால் பாதிக்கப்பட்டவர்களைவிட எம்.டி.ஆர். டி.பி.யால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குணமாக அதிக நாட்களாகும்.

## எம்.டி.ஆர். டி.பி. ஏன் பிரச்னையாக உள்ளது?

சாதாரணமாக மருந்தினால் குணப்படுத்தப்பட கூடிய நோய்களைவிட எம்.டி.ஆர். டி.பி. எளிதில் பரவக் கூடியது அதுமட்டுமல்லாமல், இதற்கு சிகிச்சை அளிப்பது மிகவும் கடினம்.

மருந்து வேலை செய்யாமல் தடை செய்யும் காசநோய்க்கு சிகிச்சை அளிக்க பயன்படும் மருந்துகள் அதிக பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. மருந்தினால் குணப்படுத்தக் கூடிய காசநோய்க்கு சிகிச்சை அளிக்கப் பயன்படும் மருந்துகளை விட இவை நன்றாக செயல்புரிவதில்லை. அதனால் எம்.டி.ஆர். டி.பி.யினால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் அதிக நாட்களுக்கு சிகிச்சை எடுத்து கொள்ள வேண்டும். இவர்களுடைய உடல் நிலை மோசமாக இருக்கலாம். இவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கும்படி ஆகலாம்.

## நான் எத்தனை நாட்களுக்கு இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருப்பேன்?

உங்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படும் மருந்தினை உங்கள் உடல் எப்படி ஏற்றுக் கொள்கிறது என்பதைப் பொறுத்து நாட்கள் மாறுபடும். ஒவ்வொருவருக்கும் எம்.டி.ஆர். டி.பி. வித்தியாசப்படும்.

இந்த காசநோயை வழக்கமான மருந்தினால் குணப்படுத்த முடியாததால் நீங்கள் பல வாரங்களுக்கு அல்லது பல மாதங்களுக்கு இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

## நான் எத்தனை நாட்களுக்கு சிகிச்சை எடுத்து கொள்ள வேண்டும்?

சாதாரண மருந்தினால் குணப்படுத்தக் கூடிய காசநோய்க்கான சிகிச்சை குறைந்தது ஆறு மாதங்கள் வரை நீடிக்கும். எம்.டி.ஆர். டி.பி.க்கான சிகிச்சையை எட்டு மாதங்கள் அல்லது அதற்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டும்.